# மாற்கு எழுதின சுவிசேஷம்

## இயேசு என்னும் ஊழியன்

# இப்புத்தகத்தை ஆக்கியோன் குறித்து

- மாற்கின் சுவிஷேசத்தை எழுதிய மாற்கு, “யோவான்மாற்கு” என்றும் அழைக்கப்படுகிறார் அப் 12:12
- மாற்கு என்னும் பெயருக்கு “பண்பட்டவர்” அல்லது “ஒளிர்கிறவர்” என்று பொருள்.
- இவர் பர்னபாவிற்கு உறவினர் (கொலோ 4:10)
- இயேசு கெத்சேமனே தோட்டத்தில் கைது செய்யப்பட்டபோது நிர்வாணமாக ஓடிப்போன வாலிபன் இவராக இருக்கலாம் (14:51-52)
- மாற்குவின் விசுவாச மாற்றத்திற்கு பேதுருவே காரணம் (1பேது 5:13)
- ஏரோதினால் பேதுரு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தபோது, சீஷர்கள் ஜெபம் பண்ணும்படி எருசலேமில் இவரது தாயாரான மரியாளின் வீட்டில் கூடினார்கள்
- (அப் 12:12)
- யோவான்மாற்கு முதலாவது மிஷனரிப்பயணத்தில் பர்னபாவோடும், சவுலோடும் கூடச் சென்றார் (அப் 12:25,13:5) ஆனால் சீக்கிரத்திலேயே எருசலேமுக்கு திரும்பிச்சென்றுவிட்டார் (அப் 13:13)
- இரண்டாவது பிரயாணத்தின்போது யோவான்மாற்குவை அழைத்துக்கொண்டுபோக பர்னபா விரும்பினாலும், முதலாவது பிரயாணத்தில் மாற்கு பாதியில் விலகியதால் மாற்குவை சேர்த்துக்கொள்ளக்கூடாது என்று பவுல் எதிர்ப்பு தெரிவித்தார். இறுதியாக பர்னபா யோவான்மாற்குவை சேர்த்துக்கொண்டும், பவுல் சீலாவை சேர்த்துக்கொண்டும் தனித்தனியே வெவ்வேறு திசைகளில் சென்றார்கள் (அப் 15:36-41)
- பின்னாளில் பவுல் தனது நிருபங்களில் மாற்குவை உடன்வேலையாள்(பிலமோன்24, கொலோ4:10) என்று அழைக்கிறார். பவுலின் ஊழியத்திற்கு பிரயோஜனம் உள்ளவராக இருந்தார் (2தீமோ 4:11)
    - அதிகாரங்கள் 16
    - வசனங்கள் 578

# மாற்கு சுவிஷேசத்தின் பின்னணி

- இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை சரிதத்தை சொல்லும் நான்கு சுவிஷேசங்களில் இதுவே மிகச் சிறியது.
- மாற்கின் கிறிஸ்துவைக் குறித்த சுவிஷேசம் ரோமர்களில் இரண்டு பிரிவினருக்காக எழுதப்பட்டது.

1. ரோமர்களுக்கு சுவிஷேசம் அறிவிக்க இது எழுதப்பட்டது.

- இதன் ஆரம்பத்திலேயே இயேசு தேவனுடைய குமாரனாக காண்பிக்கப்படுகிறார் 1:1
- இயேசுவின் வார்த்தைகளை காட்டிலும் அவரது பணியை முக்கியத்துவப்படுத்தி தேவனுடைய மற்றும் மனிதனுடைய வேலையாளாக காண்பிக்கிறார் 10:42-45

2. ரோம கிறிஸ்தவர்களுக்கு இது எழுதப்பட்டது.

- ரோம சக்கரவர்த்தியான நீரோவின் ஆளுகையில் உபத்திரவத்தை அனுபவித்துக் கொண்டிருந்த ரோமாபுரியில் இருந்த புறஜாதியாரான கிறீஸ்தவர்களை தைரியப்படுத்த மாற்கு இதை எழுதினார்.
- உலகமக்கள் அனைவரையும் சீஷர்களாகும்படி அழைத்த இயேசுவின் அழைப்பை முன்னிறுத்துவதும், அதற்கெதிரான கருத்துக்களை முறியடிப்பதுவும் மாற்கு சுவிஷேசத்தின் பிரதான நோக்கமாயிருந்தது.
- மாற்குவை பொறுத்தவரையில் சீஷத்துவம் என்பது வெறுமனே ஏதோ நடத்தை விதிகளை அனுசரிப்பதல்ல மாறாக அது இயேசுவோடுள்ள திட்டவட்டமான உறவு.
- இந்த ஐக்கியம் என்பது இயேசுவை நம்புவது, தனது நடத்தையை சரிசெய்வது, அவரது உபதேசங்களை கைககொள்வது, அவரோடுள்ள உறவினால் மாற்றமடைவது.
- -சீஷத்துவம் என்பது இயேசு ஏற்றுக்கொள்ளப்படாமல் தள்ளிவிடப்பட்டதை போன்ற உள்ள சூழ்நிலைக்கும் முகம்கொடுக்க நம்மை ஆயத்தமாக்குவது.

# மாற்கு சுவிஷேசத்தின் தனிச்சிறப்புக்கள்

1. மற்றவற்றோடு ஒப்பிடுகையில் மாற்கின் சுவிஷேசம் சுருக்கமானதும், அதிக அடர்த்தி இல்லாததுமான சுவிஷேசம்.

- மாற்கு இயேசுவின் வம்சவரலாற்று பட்டியலை தவிர்த்திருக்கிறார்.
- இயேசுவின் பொதுஊழியத்தை வனாந்தரத்தில் யோவானிடத்தில் பெற்ற ஞானஸ்நானத்தோடு ஆரம்பிக்கிறார்.
- இயேசு உயிர்த்தெழுந்து தரிசனமான நிகழ்வுகளை குறிப்பிடாமல் அவசரகதியில் மாற்கின் சுவிஷேசம் முடிவடைகிறது.
- நடுக்கமும் திகிலும் அவர்களைப் பிடித்தபடியால், அவர்கள் சீக்கிரமாய் வெளியே வந்து, கல்லறையை விட்டு ஓடினார்கள்; அவர்கள் பயந்திருந்த படியினால் ஒருவருக்கும் ஒன்றும் சொல்லாமற் போனார்கள். 16:8

2. மற்றவற்றோடு ஒப்பிடுகையில் மாற்கின் சுவிஷேசம் இயேசுவின் வார்த்தைகளை காட்டிலும் அவரது பணியை முக்கியத்துவப்படுத்துகிறது.

- முழுப்புத்தகத்திலும் அற்புதங்கள் குறித்த சம்பவங்கள் அதிக இடத்தை எடுத்துக் கொள்வதோடு அவை முழுவிபரங்களோடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. (6:14-29,7:1-23,9:14-29,12:28-34).
- அதேவேளையில் இயேசுவின் உபதேசங்கள் குறைந்த அளவிலும் அதிக விபரங்களின்றியும் சொல்லப்பட்டிருக்கின்றது.
- பாக்கிய வசனங்களோ, கர்த்தருடைய ஜெபமோ இடம்பெறவில்லை.
- மாற்கில் 4 உவமைகள் மாத்திரமே உள்ளன.
- ஆனால் 19 அற்புதங்கள் விரிவான முறையில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

### 3. மாற்கின் சுவிஷேசம் ஒரு அவசரத்தன்மையை வெளிப்படுத்துகிறது.

அ) சுவிஷேசத்தை வாசிக்கும் வாசகர் சுவிஷேசத்தின் செய்தியை விரைவாய் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்னும் அவசரம்.

"காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று" 1:15

"இவைகளெல்லாம் சம்பவிக்குமுன்னே இந்தச் சந்ததி ஒழிந்துபோகாது" 13:30, 9:1 (ஒப்பிடுக)

ஆ) இயேசு கிறிஸ்துவை பணியாளாக முன்னிறுத்தும் அவசரம்.

- தமிழில் உடனே என்றும் ஆங்கிலத்தில் immediately என்றும் கிரேக்கத்தில் euthys சொல்லப்படும் வார்த்தையானது பழைய ஏற்பாட்டில் 4 முறை மட்டுமே வருகிறது. புதிய ஏற்பாட்டில் 59 முறை வருகிறது. மாற்கின் சுவிஷேசத்தில் 41 முறை வருகிறது. காரணம் என்ன?
- இங்கே வேலையாளாகக் காட்டிப்படும் இயேசு, ஒரு நல்ல வேலைக்காரன், அவருக்கு கொடுக்கப்பட்ட அல்லது கட்டளையிடப்பட்ட பணியை தாமமில்லாமல் உடனே செய்கிறவர்.

### 4. மாற்கின் சுவிஷேசம் இயேசுவை மனிதனாக அழகுற எடுத்துக்காட்டுகிறது.

- இயேசுவுக்கு பசியுண்டாயிற்று (11:12) அவர் சோர்வடைந்தார் (6:31)
- எல்லாவித மனித உணர்ச்சிகளையும் அவர் காண்பித்திருக்கிறார்: மனதுருக்கம் (1:41) கோபம் (3:5) துக்கம் (3:5) ஆச்சரியம் (6:6)
- இரக்கம் (6:34) விசனம் (10:14) வேதனை (14:34)
- புதிய ஏற்பாட்டில் மாற்கின் சுவிஷேசத்தில் மாத்திரமே இயேசு "மரியாளின் குமாரன்" என்று அழைக்கப்படுகிறார் (6:3)
- இதிலே மாத்திரம்தான் இயேசு "தச்சன்" என்று அழைக்கப்படுகிறார் (6:3). மத்தேயுவின் சுவிஷேசத்தில் "தச்சனுடைய குமாரன்" என்று அழைக்கப்படுகிறார். (மத் 13:55)

5. மாற்கு அடிக்கடி யூதர்களின் காரியங்களை விபரிக்கிறாரேயன்றி ரோமர்களின் காரியங்களை விபரிக்கவில்லை

- ஒருபக்கத்தில் பார்த்தால் மாற்கு யூத சட்டங்களை குறித்து சொல்லவில்லை. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனத்தை ஒரேயொரு முறை மாத்திரமே குறிப்பிடுகிறார்.
- இன்னெரு பக்கத்தில் மாற்கின் வாசகர்களில் பலரும் யூத வழக்கங்களை அறியாதவர்களாயிருந்தார்கள். இஸ்ரவேல் மற்றும் முழு உலகத்திற்கான தேவனுடைய வேலையை நிறைவேற்ற இயேசு வந்தார் என்பதை புரிந்து கொள்ள அவர்களுக்கு யூத வழக்கங்கள் குறித்த அறிவைப் புகட்ட மாற்கு அவற்றை விளக்கிச் சொல்லவேண்டியிருந்தது.
- 7:3-4ல் யூதர்களின் சுத்தீகரிக்கும் வழக்கம் விளக்கிச் சொல்லப்படுகிறது. இதை 10:12 உடன் ஒப்பிட்டால் ரோமர்களின் விவாகரத்து சட்டத்தை அவர்கள் அறிந்திருப்பதினால் விளக்கிச் சொல்லப்படவில்லை.
- 1ம் நூற்றாண்டின் பாலஸ்தீனத்தில் பொதுவான மொழியாக இருந்த அரமேய மொழிச் சொற்களுக்கான அர்த்தத்தை சொல்லுகிறார்: பொவனெர்கேஸ்(3:17), தலீத்தாகூமி(5:41), கொர்பான்(7:11), எப்பத்தா(7:34), பர்திமேயு(10:46), அப்பா(14:36), கொல்கொதா(15:22), எலோயீ! எலோயீ! லாமா சபக்தானி(15:34)
- ஆனால் லத்தீன் மொழிச் சொற்களுக்கான அர்த்தம் சொல்லப்படவில்லை: லேகியோன் (5:9,15), டெனாரியஸ் (ஒருபணம்)(12:15), பிரிடோரியம் (அரண்மனைக் கூடம்)(15:16), நூற்றுக்கு அதிபதி (15:19)

6. மாற்கின் சுவிஷேசம் இயேசுவின் பாடுகளுக்கும் மரணத்திற்கும் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது.

- 3:6லிலேயே இயேசுவை கொல்ல நடக்கும் சதியாலோசனை சொல்லப்படுகிறது. (மத் 12:14, லூக் 19:47 ஒப்பிட்டு பார்க்கவும்)
- அவரது பாடுகளைக் குறித்து மூன்று முன்னறிவிப்புக்கள் (8:31,9:31,10:33–34)

7. மாற்கு ரோமர்களின் நேரக்கணக்கீட்டு முறையையே பயன்படுத்துகிறார்.

- யூதர்களின் நேரக்கணக்கீட்டு முறையும் ரோமர்களின் நேரக்கணக்கீட்டு முறையும் வித்தியாசமானது.
- யூதர்களின் நாள் அதிகாலையில் ஆரம்பித்து சூரிய அஸ்தமனத்தில் முடிகிறது.
- (15:25ல் மூன்றாம் மணிவேளை "அவரை சிலுவையில் அறைந்தபோது". யோவான் 19:14ல் ஆறாம் மணிவேளை அது இறுதியாக இயேசுவை சிலுவையில் அறையும்படி தீர்ப்பு சொல்ல பிலாத்து நியாயசனத்தில் உட்கார்ந்த நேரம்)
- நாம் தற்போது பயன்படுத்துவது ரோமாகளின் நேரக்கணக்கீட்டு முறை. இதில் நாள் ஆரம்பிப்பது நடுஇரவில். நேரம் 12 மணி இடைவெளிகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது.

| நேரம் | ரோம நேரம் | யூத நேரம் |
|---|---|---|
| 12:00 நடுஇரவு | நாளின் துவக்கம் | 6ம் மணி இரவு |
| 3:00 காலை | 3ம் மணி பகல் | 9ம் மணி இரவு |
| 6:00 காலை | 6ம் மணி பகல் | நாளின் துவக்கம் சூரிய உதயம் |
| 9:00 காலை | 9ம் மணி பகல் | 3ம் மணி பகல் |
| 12:00 மதியம் | 12ம் மணி பகல் | 6ம் மணி பகல் |
| 3:00 மாலை | 3ம் மணி மாலை | 9ம் மணி பகல் |
| 6:00 மாலை | 6ம் மணி மாலை | 12ம் மணி சூரிய அஸ்தமனம் |
| 9:00 இரவு | 9ம் மணி மாலை | 3ம் மணி இரவு |

8. மாற்கின் சுவிஷேசம் இரகசியத்தை மையமாக கொண்டிருக்கிறது

- இயேசுவின் சொந்த சீஷர்களே அவர் யாரென்று புரிந்துகொள்வில்லை (4:41,6:51-52)
- இயேசு தாம் யாரென்பதையும், தமது அற்புத செய்கைகளையும் அறிவிக்க வேண்டாம் என்று கட்டளையிடுகிறார் (1:23–25,43–44,3:11-12,5:43,7:36, 8:30,9:9).
- இயேசு சொல்லுவதை மற்றவர்கள் புரிந்துகொளாதபடி அவர் உவமைகளினால் பேசினார் (4:10-12).
- எல்லையில்லாத தேவனுடைய ஞானம் இயேசுவில் வெளியரங்கமாகி மகிமையடைகிறது.

9. மாற்கு இயேசுவின் சீஷர்களின் தவறுகளை முக்கியப்படுத்திக் காண்பிக்கிறார்.

- ஏற்றுக்கொள்ளாமை (4:41,6:51–52,8:14–21)
- சுயநலம் (8:32,9:32–34,10:35–41)
- இயேசுவைக் காட்டிக்கொடுத்தல், மறுதலித்தல், கைவிடுதல் (14:10–11,17–21, 26–31, 37–38, 44–45,50,66–72)
- மாற்கின் சுவிஷேசம் சீஷர்களின் விசுவாசமின்மை திருத்தப்பட்டதாக எந்த தகவலும் தராமல் முடிவடைகிறது.

➡ யூதாசின் குற்ற உணர்வு (மத் 27:3-10)

➡ அல்லது பேதுருவின் திருந்துதல் (யோவான் 21:15-19)

➡ அல்லது இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குபின் பதினொருவருக்கும் இயேசுவோடு உண்டான இணக்கம் (மத் 28:18-20, லூக் 24:36-53, யோவா 20:19-21:14)

# பாக்கியங்களும் சாபங்களும்

| பாக்கியங்கள் 5:3-12 | சாபங்கள் 23:13-33 |
|---|---|
| பரலோகராஜ்யம் எளிமையுள்ளவர்களுக்கானது வச 3 | பரலோகராஜ்யம் பூட்டப்பட்டது வச 13 |
| துயரப்படுகிறவர்கள் ஆறுதலடைவார்கள் வச4 | துக்கிக்கிறவர்களை வேதனைப்படுத்துகிறார்கள் வச14 |
| சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் வச5 | மதவெறியர்கள் சுற்றித்திரிகிறார்கள் வச15 |
| நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் திருப்தியடைவார்கள். வச 6 | விதிகளை சாதகமாக பயன்படுத்தி மோசடி செய்கிறார்கள் வச 16-22 |
| இரக்கமுள்ளவர்கள் இரக்கம் பெறுவார்கள் வச 7 | இரக்கம் காட்டாமல் விட்டுவிடப்படுகிறது வச 23,24 |
| இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள் வச 8 | பரிசுத்தம் இல்லை, அசுத்தம் இருக்கிறது குருட்டாட்டமிருக்கிறது வச 25,26 |
| சமாதானம்பண்ணுகிறவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள். வச 9 | மாய்மாலமும், நீதியின்மையும் வச27,28 |
| துன்பப்படுகிறவர்கள் வச10-12 | துன்பப்படுத்துகிறவர்கள் வச 29-33 |

# முக்கிய பகுதிகள்

**இயேசுவின் ஊழியத்தின் ஆரம்பம் (1:1-13)**

- அவருக்கு முன்னோடியவன் (1:1–8)
- அவரது ஞானஸ்நானம் (1:9–11)
- அவரது சோதனை (1:12–13)

**இயேசுவின் கலிலேயா ஊழியம் (1:14-6:29)**

- ஆரம்பகால கலிலேயா ஊழியம் (1:14—3:12)

1. முதலாவது சீஷர்களை அழைத்தல் (1:14–20)
2. கப்பர்நகூமில் அற்பதங்கள் (1:21–34)
3. கலிலேயாவில் பிரசங்கித்தலும், சுகமளித்தலும் (1:35–45)
4. கப்பர்நகூமில் ஊழியம் செய்தல் (2:1–22)
5. ஓய்வுநாள் சர்ச்சை (2:23—3:12)

- பிற்கால கலிலேயா ஊழியம் (3:13—6:29)

1.12 அப்போஸ்தலர்களை தெரிவுசெய்தல் (3:13–19)

2.கப்பர்நகூமில் உபதேசம் செய்தல் (3:20–35)

3.ராஜ்யத்தின் உவமைகள் (4:1–34)

4.கலிலேயா கடலை அமைதிப்படுத்துதல் (4:35–41)

5.பிசாசு பிடித்தவனை குணமாக்குதல் (5:1–20)

6.கலிலேயாவில் இன்னும் அதிசயங்கள் செய்தல் (5:21–43)

7.இயேசுவின் சொந்த ஊரில் அவிசுவாசம் (6:1–6)

8.ஆறு அப்போஸ்தல குழுக்கள் கலிலேயாவில் பிரசங்கித்தலும் குணமாக்குதலும் (6:7

9.இயேசுவின் ஊழியத்திற்கெதிரான ஏரோதுவின் எதிர்வினை (6:14–29)

# முக்கிய பகுதிகள்

- காரணமாய் கலிலேயாவிலிருந்து விலகுதல் (6:30-9:29)
- கிழக்கு கடற்கரைப் பகுதிக்கு (6:30–52)
- கலிலேயாவின் மேற்கு கடற்கரைப் பகுதிக்கு (6:53—7:23)
- தீரு சீதோன் பட்டணங்களுக்கு (7:24–30)
- தெக்கப்போலி பகுதிக்கு (7:31—8:10)
- பிலிப்புச் செசரியா பட்டணத்தைச் சேர்ந்த கிராமங்களுக்கு (8:11–30)
- மறுரூப மலைக்கு (8:31—9:29)
- கலிலேயாவில் இறுதி ஊழியம் (9:30-50)

யூதேயா,பெரேயா பகுதிகளில் இயேசுவின் ஊழியம் (அதி 10)

- விவாகரத்தை குறித்த உபதேசம் (10:1–12)
- பிள்ளைகள் குறித்த உபதேசம் (10:13–16)
- ஐசுவரியமுள்ள வாலிபன் (10:17–31)
- இரு சகோதர்களின் விண்ணப்பம் (10:32–45)
- பர்திமேயுவுக்கு பார்வை கிடைக்கச்செய்தல் (10:46–52)

இயேசுவின் பாடுகள் (அதி 11-15)

- வெற்றிப் பிரவேசம் (11:1–11)
- ஆலய சுத்தீகரிப்பு (11:12–19)
- யூத தலைவர்களோடான சர்ச்சைகளின் முடிவு (11:20—12:44)
- காலத்தின் முடிவின் அடையாளங்கள் (அதி 13)
- இயேசு அபிஷேகிக்கப்படுதல் (14:1–11)
- கர்த்தரின் பந்தி (14:12–26)
- இயேசுவின் கைது, விசாரணை, மரணம் (14:27—15:47)

இயேசுவின் உயிர்த்தெழுதல் (அதி 16)